கொலை தலைமைக் குற்றவாளி கருப்பு / சுரேஷ் கிருஷ்ண,
மற்றும் இராமநாதபுரம் இராஜேஸ்வரி பற்றி பற.

Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்றவியல் நடைமுறைச் சட்டம் 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120308

1. District மாவட்டம்: இராமநாதபுரம் PS: ஆர்.எஸ்.மங்கலம் காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 277/2025 முத.அ. எண் Date: 29.4.202 நாள்

2. (i) Act சட்டம்: Pc Amendment Act 2018 Sections பிரிவுகள்: 7(a) of Pc Amend
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 29-4-2025
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை மதியம் 14.35 மணி முதல்
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29-4-25 Time : நேரம் இரவு 19.00 மணி 19.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் பதிவு-I Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 கி.மீ மேற்கில்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மோகனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of PS : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : இராமச்சந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(c) Date / Year of Birth : 46/25 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கூலி வேலை தொழிலாளர் (g) Address : முகவரி உறவு முறை மற்றும் கள ஆய்வு பணி இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

காலம் 12 ல் குற்றப்பத்திரிக்கை செய்யப்பட்டது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரியின் விபரம்:

1. திரு.மு.திருநாவுக்கரசு, 59/2025, த/பெ.முனியாண்டி., வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கூடுதல் பொறுப்பு கிராம ஊராட்சிகள், போகலூர் ஊராட்சி, இராமநாதபுரம் மாவட்டம்
2. திரு.வே.பாஸ்கரன், வயது 60/2025 த/பெ வேல்முருகன், ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர், வீட்டு முகவரி ஆணைகுடி கிராமம், எட்டிவயல் போஸ்ட், பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் (தனிநபர்)
3. திரு.இரா.பாஸ்கரபூபதி, வயது 49/2025, த/பெ. இராமச்சந்திர பூபதி, 9/16–1, சாயக்காரத்தெரு, கமுதி, கமுதி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் (தனிநபர்)

சமர்ப்பிக்கிறேன் – இன்று 29.04.2025 ஆம்தேதி 21.00 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மு.இராமச்சந்திரன் அவர்கள் 29.04.2025 ம் தேதி 14.35 மணிமுதல் இரவு 19.00 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனை சம்பந்தமான அறிக்கை, பதிவு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29-04-2025 - 23.00 மணி.

Name: பெயர் N. இராசேஷ்வர்
Rank: நிலை ..... No. எண் இரண்டாம் நிலை காவல் ஆய்வாளர் இராமநாதபுரம்.

இராமநாதபுரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண் 07/2025 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

செய்யப்பட்ட வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூபாய் 2,56,000/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 07/2025 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தம்) சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் பின்வருமாறு, அனுப்புநர் திரு.மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு இராமநாதபுரம். பெறுநர் திரு.ந.இராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். அய்யா, பொருள்: திடீர் சோதனை – 29.04.2025ம் தேதி 14.35 மணிமுதல் இரவு 19.00 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திடீர் சோதனை நடத்தப்பட்டது – மேல் நடவடிக்கை எடுக்க கோருவது – தொடர்பாக. பார்வை: எனது திடீர் சோதனை அறிக்கை, நாள் 29.04.2025. இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவில் அலுவலக பணியில் இருந்த போது 29.04.2025 ஆம்தேதியன்று 13.00 மணிக்கு இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம பஞ்சாயத்து) நடைபெறும் பல்வேறு திட்டங்களின் கீழ் ஒப்பந்தவேலை கொடுப்பதற்கும், வேலை பார்த்த தொகையினை விடுவிப்பதற்கும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து தவறான வழியில் லஞ்சமாகப் பணம் பெற்று வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இன்று மதியம் 14.35 மணிக்கு இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை அலுவலகத்தை மேலே குறிப்பட்டுள்ள அரசு சாட்சி முன்னிலையில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது இராமநாதபுரம் – மதுரை தேசிய நெடுஞ் சாலையில் சத்திரக்குடி

பஸ்நிலையத்திலிருந்து 1 கிமீ கிழக்கே அமைந்துள்ளது. மேற்படி போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகமானது ஒருங்கிணைந்த யூனியன் வளாகத்தில் உள்ளே இடது பக்கத்தில் வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள நுழைவாயிலில் ஒரு ஹாலும் அதிலிருந்து இடதுபுறம் வட்டார வளர்ச்சி அலுவலர் அறையும், அதன் அருகில் அலுவலக பணியாளர் அமரும் ஒரு பெரிய அறையும், அதற்கு எதிரே கணிப்பொறி அறையும், அதனை அடுத்து பதிவறையும் அமைந்துள்ளது. அந்த அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் வெளியே செல்லாமலும் வெளியில் இருந்து யாரும் அலுவலகத்திற்குள் உள்ளே வராமல் இருக்கும் வண்ணம் கண்காணிக்க என்னுடன் வந்த போலீஸ் பார்ட்டியினரை நியமித்தேன். மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அலுவலர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்ட பின்னர் அரசு சாட்சி திரு.கோ.கலைமுருகன், உதவியாளர், உதவி இயக்குநர் மாவட்ட நிலஅளவை அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம் என்பவர் முன்னிலையில் சோதனை ஆரம்பிக்கப்பட்டது.

மேற்படி திடீர் சோதனையின் போது, முதலில் வட்டார வளர்ச்சி அலுவர் (கி.ஊ) அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது அப்போது அங்கே திரு.வே.பாஸ்கரன், வயது 60/2025 த/பெ வேல்முருகன், ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர், திரு.க.செல்வகுமார், வயது 57/2025 த/பெ.கணேசன், ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர் ஆகியோர்களுடன் திரு.மு.திருநாவுக்கரசு, 59/2025, த/பெ.முனியாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கூடுதல் பொறுப்பு கிராம ஊராட்சிகள், போகலூர் ஊராட்சி, இராமநாதபுரம் மாவட்டம் என்பவர் அவரது அலுவலக இருக்கையில் அமர்ந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தார். அதனைத்தொடர்ந்து திரு.வே.பாஸ்கரன், வயது 60/2025 த/பெ வேல்முருகன், ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர் என்பவரை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடம் ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து

திரு.க.செல்வகுமார், வயது 57/2025 த/பெ.கணேசன், ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர் என்பவரை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடம் ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார்.

அதனைத்தொடர்ந்து, வட்டார வளர்ச்சி அலுவர் அறையில் இருந்த திரு.மு.திருநாவுக்கரசு, 59/2025, த/பெ.முனியாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கூடுதல் பொறுப்பு கிராம ஊராட்சிகள், போகலூர் ஊராட்சி, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது பக்க சட்டை பாக்கெட்டில் . ரூபாய் 200/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, தனது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறியதால் மேற்படி ரூ.200/- அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

பின்பு வட்டார வளர்ச்சி அலுவலரின் டேபிளை அரசுசாட்சி முன்னிலையில் சோதனை செய்ய ஒரு பைலுக்கு அடியில் அதில் ரூ. 50,000/- (ரூ.500x100) சந்தேகத்திற்கிடமான முறையில் ஒரு பிரவுன் நிற கவரில் இருந்தது. மேலும் அவரது மேஜையின் டிராயரை சோதனையிடும் போது அதில் லப்பர் பேண்டு போடப்பட்டு இரண்டு கட்டுகளாக ரூ.60,000/-(ரூ.500x120) மற்றும் ரூ.40,000/-(ரூ.500x80) என மொத்தம் ரூ.1,00,000/- இருந்தது. மேலும் அவரிடம் தொடர்ந்து ரூ.1,50,000/- குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடம் விசாரிக்க, மேற்படி பணமானது தனது மேஜைக்கு எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது எனக்கூறி மறுத்தார். ஆகவே மேற்படி பணம் குறித்து தகுந்த மூகாந்திரம் ஏதும் கூறாததால் மேற்படி பணம் கணக்கில் வராத பணமாக கருதி

கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது.

மேற்படி அலுவலகத்தில் உள்ள பணியாளர்கள் அமரும் ஹாலில் அமர்திருந்த பின்னர் தெரிந்து கொண்ட திரு.இரா.ராஜீ, வயது 60/2025 த/பெ இராஜகோபால், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என்பவரை அரசு சாட்சி முன்னிலையில் அவரிடம் ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூபாய் 300/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, அவரது கைச்செலவிற்கு இன்று ரூ.300/- கொண்டு வந்ததாகவும் கூறியவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, அலுவலக பணியாளர்கள் அமரும் அதே ஹாலில் அமர்திருந்த பின்னர் தெரிந்து கொண்ட திரு.இரா.ரமேஷ்பாபு, வயது 58/2025 த/பெ இராமச்சந்திரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சத்துணவு) என்பவரை அரசு சாட்சி முன்னிலையில் அவரிடம் ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூ.15/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, அவரது கைச்செலவிற்கு இன்று ரூ.15/- கொண்டு வந்ததாகவும் கூறியவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, அலுவலக பணியாளர்கள் அமரும் அதே ஹாலில் அமர்திருந்த பின்னர் தெரிந்து கொண்ட திருமதி.செ.வளர்மதி, வயது 48/2025 த/பெ செல்லத்துரை, இளநிலை உதவியாளர் (வட்டார ஊராட்சி) என்பவரை அரசு சாட்சி முன்னிலையில் அவரிடம் ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என

கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அவரது சம்மதத்துடன் அவரது அரக்கு கலர் பேக்கில் சோதனை செய்ய ரூ.120/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, அவரது கைச்செலவிற்கு ரூ. 120/– கொண்டு வந்ததாகவும் கூறியவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் இவ்வலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த TN 65 BB 0505 என்ற நான்கு சக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் திரு.பாஸ்கரன், அரசு சாட்சி, மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் திருநாவுக்கரசு முன்னிலையில் சோதனை செய்ய அந்த வாகனத்தின் Tash Board ல் ரூ.11,000/– இருந்தது மேற்படி வாகனத்தில் அமர்ந்திருந்த திரு.வீ.இராமதாஸ், வயது 55/2025, த/பெ. வீரப்பெருமாள் என்பவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது இடுப்பில் ரூபாய் 40,000/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முதலில் எனது சொந்த சேமிப்பு பணம் என்று கூறியவர் பின்னர் மைத்துனர் பாஸ்கரன் என்ற ஒப்பந்ததாரரிடம் விசாரித்த போது பாஸ்கரன் தனது பணத்தை தான் அவரிடம் ரூ.51,000/–த்தை கொடுத்து வைத்திருந்தேன் என்று கூறியதால் மேற்படி பணத்தை பாஸ்கரின் பணம் என்று முன்னுக்கு பின் முரணாக கூறியதால் அந்தப்பணம் ரூ.51,000/–ம் மேல் விசாரணைக்காக அரசு சாட்சி முன்னிலையில் கைப்பற்றப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, இவ்வலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த TN 65 BW 0033 என்ற நான்கு சக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் திரு.இரா.பாஸ்கரபூபதி, அரசு சாட்சி, மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் திருநாவுக்கரசு முன்னிலையில் சோதனை செய்ய அந்த வாகனத்தின் Tash Board ல் ரூ.35,000/– இருந்தது முன்னதாக சோதனைக்கு முன்பே மேற்படி

வாகனத்தில் அமர்ந்திருந்த திரு.இரா.பாஸ்கரபூபதி, வயது 49/2025, த/பெ. இராமச்சந்திர பூபதி என்பவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூபாய் 20,000/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, நான் மஞ்சூர் பஞ்சாயத்தில் தார் சாலை போடும் பணியை போகலூர் சேர்மன் குணசேகரன் அவர்கள் பார்க்க சொன்னதின் பேரில் நான் பார்த்தேன். மேற்படி வேலைக்குண்டான தொகை ரூ.8,20,000/- வந்து விட்டதா என கேட்பதற்கு இவ்வலுவலகம் வந்ததாக கூறினார். மேலும் மேற்படி மேற்படி பணம் தன்னுடைய லாரி FC செய்வதற்காக கொண்டு வந்திருக்கிறேன் எனக் கூறினார். மேற்படி விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாததால் ரூ.55,000/- அரசு சாட்சி முன்னிலையில் கைப்பற்றப்பட்டது.

மேலும், நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆஜர்படுத்திய 2025 ஆம் ஆண்டிற்கான வருகைப்பதிவேடு (பக்கம் 1 முதல் 50 வரை), அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் தேர்தெடுக்கப்பட்ட 5 ஊராட்சிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட கோப்பு (பக்கம் 1 முதல் 377 வரை), 2024-2025 மற்றும் 2025-2026 ஆண்டுக்கான ஒப்பந்தப்புள்ளி பதிவேடு (பக்கம் 1 முதல் 100 வரை) மற்றும் கணக்கில் காட்ட இயலாத பணம் ரூபாய் ரூ.2,56,000/- ஆகியவை அரசு சாட்சிகள் முன்னிலையில் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இவ்வலுவலகத்தில் கொடிநாள் பதிவேடு மற்றும் பாக்கெட் மணி ரிஜிஸ்டர் ஆகியவை பராமரிக்கப்படுகின்றதா என வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கேட்டதற்கு அவைகள் பராமரிக்கப்படவில்லை என விபரம் தெரிவித்தார். மேற்படி திடீர் சோதனை இன்று 29.04.2025ம் தேதி மதியம் 14.35 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 19.00 மணிக்கு

முடிக்கப்பட்டது. இச்சோதனையின் போது அனைத்து அலுவலர்களும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர்.

எனவே, இந்த சோதனையின் அடிப்படையில் 1) திரு.மு.திருநாவுக்கரசு, 59/2025, த/பெ.முனியாண்டி., வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கூடுதல் பொறுப்பு கிராம ஊராட்சிகள், போகலூர் ஊராட்சி, இராமநாதபுரம் மாவட்டம் 2) திரு.வே.பாஸ்கரன், வயது 60/2025 த/பெ வேல்முருகன், ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர், வீட்டு முகவரி ஆணைகுடி கிராமம், எட்டிவயல் போஸ்ட், பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் (தனிநபர்) 3) திரு.இரா.பாஸ்கரபூபதி, வயது 49/2025, த/பெ. இராமச்சந்திர பூபதி, 9/16-1, சாயக்காரத்தெரு, கமுதி, கமுதி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் (தனிநபர்) ஆகியோர்கள் முறைகேடான செயல்களில் ஈடுபட்டதற்கான முகாந்திரம் இருப்பது தெரிய வருகிறது.

எனவே, மேற்கண்ட இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில பணிபுரியும் அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், கணக்கில் காட்ட இயலாத மொத்தப் பணம் ரூபாய் 2,56,000/-, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் மற்றும் திடீர் சோதனை சம்மந்தமான எனது அறிக்கை ஆகியவற்றை உடனடியாக வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒப்பம்) மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். 29.04.2025. மேலும், உயர் அதிகாரிகளின் வாய்மொழி ஒப்புதல் பெற்று மேற்படி எதிரிகள் மீது இன்று 29.04.2025ம் தேதி 22.00 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 07/2025 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல்

அறிக்கையின் அசல் மற்றும் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் அசல், எதிரிகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

29.4.25

end